முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1320

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

11.05.2023, வியாழக்கிழமை

1. பேருலக மாற்றத்தின் சக்தியாக
பிரபஞ்சங்கள் வணங்க சரவணச்சுடரேற்றி
ஆறுமுகன் என் வழிபாடு நெறிமுறையை
அகிலத்தார்க்கு அருளுகின்ற அரங்கா வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் சித்திரை மாதம் 28 ம் நாள், 11.05.2023, வியாழக்கிழமை)
ஊழ்வென்று கலியுக மக்களை
உண்மை நெறிபட வாழவைக்கும்
3. வைக்கின்ற மாதவ சக்தியாக
வையகத்தை காக்கின்ற மகா ஞானியாக
ஆக்கமுடன் என் அவதாரம் எடுத்த
அரங்கனே உந்தனுள் யானிருந்து
4. யானிருந்து உலக சேவையாக
உயர்வுபட அற்புதத்தை நடத்திவர
ஞானதேசிகன் சொல் செயல் அனைத்தும்
ஞானபண்டிதன் என் செயல்பாடாகும்
5. ஆகவே அரங்கன் வழி தொடரும்
அனைத்து அன்பர்களும் மனமுவந்து
ஜெகமாற்றம் நடக்க இனிதே சரணாகதி
சித்தவழி அவரவரும் அடிபணிந்து
6. அடிபணிந்து அரங்கன் தர்மத்தை
அரங்கன் தரும் ஞான உபதேசங்களை
நாடி ஏற்று இனிதே நாள்தோறும்
நம்பகமுற நாமஜெபதபங்கள் போற்றி

7. போற்றி தர்மத்தை கைக்கொள்ள
புண்ணியவான்களாக ஆற்றல் பெருக்கம்கண்டு
மாற்றமதுவும் உலகில் புரிந்திடுவர்
மகான் அரங்கன் அவதாரத்தின் நோக்கத்தை நிறைவேற்றிடுவர்

8. ஆகவே உலகோர் அரங்கன் வழி
அடைகின்ற மகா தீட்சைகளெல்லாம்
யுகத்தில் ஆறுமுகன் யான் தரும் உயர்தீட்சையாகும்
உரைத்திட்ட ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—